9-40 மணி.

செய்யுமா என்று அறிவதோடு இந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்கு எண்ணெய்—எரிவாயு நிறுவனத்திடமிருந்து கேட்கப்பட்ட பணம் அரசுக்குக் கிடைத்திருக்கிறதா ? அப்படி இல்லை என்றால் மத்திய சாலை நிதியிலிருந்துதான் அதைச் செய்ய வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக் கிறோம். விரைவில் அதற்கான பதில் வருமென்று எதிர் பார்க்கிறோம். அது குறித்து அரசாங்கம் தொடர்ந்து நட வடிக்கை எடுத்து வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, திருவாரூர்-கும்பகோணம் நெடுஞ்சாலையில் ஏராளமான வளைவுகள் இருப்பதால், எதிர்ப்புறத்தில் வரும் வாகனங்கள் தெரியாமல் விபத்துக்கள் நடைபெறுகின்றன. எனவே அந்த வளைவுகளை நிமிர்த்த உடனடியாக ஒரு திட்டத்தை அரசு செயற்படுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரி வித்த கருத்து நியாயமானதுகூட. பொதுவாக தஞ்சை மாவட்டத்தில் சாலைகள் வளைந்து வளைந்துதான் போகின் றன. ஆகையால் இவைகளை எல்லாம் ஒரே சீராக, நேர்க் கோட்டுக்குக் கொண்டு வர முடியுமா, எந்தெந்த சாலைகளுக்கு முதலிடம் கொடுத்துச் செய்யலாம் என்று அறிக்கை கேட்டிருக்கிறேன். அது வந்த பிறகு நிதி நிலை மைக்கு ஏற்ப சாலைகளை நிமிர்த்தும் பணி மேற்கொள்ளப் படும்.

உடப்பை திட்டுப் பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம்.

* 4454. திரு. எம். சீரங்கன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத் தூர் ஒன்றியம், லக்கம்பட்டி பஞ்சாயத்தில் மாண்டியூர்காடு பகுதியில் உடப்பை திட்டுப்

பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம், மக்கம்பட்டி பஞ்சாயத்தில் ஊமாண்டியூர்காடு பகுதியில் உடப்பைதிட்டு பள்ளம் நீர்த் தேக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வண்டி தடம் புரண்டு போகிறது. திரு. சீரங்கன் இடத்தில் இல்லை. எனவே கேள்விக்கு இடமில்லை.

தொண்டாமுத்தூர் மருத்துவமனை.

*3791. **திரு. யூ. கே. வெள்ளிங்கிரி** :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் மருத்துவமனைக்குக் கூடுதல் படுக்கை வசதி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொண்டாமுத்தூர் பகுதி என்பது, கோவை பெரிய ஆஸ்பத்திரியிலிருந்து கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குட்டி நகரம். அங்கே கூடுதல் படுக்கை வசதிகள் செய்தால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய